துணை இயக்குநர் முதல்வர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், கோவை அவர்களின்
செயல் முறை ஆணை

முன்னிலை திரு.எஸ். அழகிரிசாமி. பிஇ.,

செ.மு.ஆணை எண்.1950/பஅ2/2015

நாள்.23.08.2016

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, பயிற்சிப் பிரிவு –அடித்தளப்பணி – அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், கோவை – இத்துறையில் பணிபுரியும்போது பணியிடை மறைந்த திருமதி. கே. எஸ். உஷா, உதவியாளரின் வாரிசு திரு. பா. அபராஜித் அவர்களுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமனம் அலுவலக உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக

பார்வை :
1. இணை இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 62532/ பஅ4/2006, நாள்.27.04.2015
2. இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண். 62532/பஅ4/2006, நாள். 12.06.2016

ஆணை:

கோவை மண்டலப் பயிற்சி இணை இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றி பணிபுரிந்தபோது பணியிடை மரணமடைந்த திருமதி. கே. எஸ். உஷா, அவர்களின் வாரிசுதாரரான திரு. பா. அபராஜித் அவர்களை இவ்வலுவலகத்தில் தமிழ்நாடு சார்நிலைப் பணி விதிகள் 10 (a ) (i) –ன்படி தற்காலிகமாக அலுவலக உதவியாளராகப் பணிநியமனம் செய்து பார்வை 1–ல் காணும் இணை இயக்குநர் (கைப) அவர்களின் செயல்முறை ஆணையில் ஆணையிடப்பட்டதையடுத்து திரு. பா. அபராஜித் அவர்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக உதவியாளராக 29.04.2015 முப பணியேற்றுள்ளார்.

பார்வை 2–ல் காணும் இயக்குநர் அவர்களின் குறிப்பாணையில், அடிப்படை பணி தொகுதியில் பணியமர்த்தப்பட்டுள்ள திரு. பா. அபராஜித், அலுவலக உதவியாளர் அவர்களின் பணிகளை பணிவரன்முறை செய்திட துணை இயக்குநர் /முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், கோவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி பொது விதி 23 (a)(i) - ன்படி திரு. பா. அபராஜித், அலுவலக உதவியாளர் அவர்களின் பணிகள் அலுவலக உதவியாளர் பதவியில் 29.04.2015 முப முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

அடிப்படைப் பணித் தொகுதி விதிகளின் விதி 6(b) –ன்படி இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான 3 ஆண்டு காலத்திற்குள் ஓராண்டு கால தகுதிகாண்பருவத்தில் உள்ளதாகக் கருதப்படுவார். இவர் ஓராண்டுகால பணிமுடித்துள்ளதால், இவருக்கு பெறத் தகுதியுடைய ஊதிய உயர்வினைப் பெறவும் இசைவளிக்கப்படுகிறது.

துணை இயக்குநர் / முதல்வர்
அரசு தொழிற்பயிற்சி நிலையம்
கோயமுத்தூர்

பெறுநர் :

திரு. பா. அபராஜித்,
அலுவலக உதவியாளர்,
அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,
கோவை.29

நகல் : பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் செய்யும் பொருட்டு

நகல் : இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, (பஅ4 பிரிவு), சென்னை 32 } தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது

நகல் : மண்டலப் பயிற்சி இணை இயக்குநர், கோவை.29 } தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது

நகல் : இருப்புக் கோப்பு